# கொடிய கொரோனா

- முனைவர் அ.சஜீன், தூத்தூர்

சீனாவில் மனிதனாய் பிறந்திருந்தாலல்லவா கண்ணில் தென்படுவாய்
புரியாத புதிராய் இருந்த நீ அறிவியலுக்கு அப்பால் இருந்தாய்
கொடிய விலங்குகளில் குடிகொண்ட நீ எம் அழைக்கப்படாத விருந்தினர்
செய்வதறியாமல் திகைத்து நின்ற எம் ஆராட்சியாளர்

இபோலா எச் ஐ வி சுவாச நோய் பன்றிக்காய்ச்சல் பறவைக்காய்ச்சல்
இத்தனை பயத்தை உருவாக்கினாயே மானிடர் உள்ளத்தில்
உஹானில் உலர்ந்த சந்தையில் உயிருள்ள விலங்காய் விற்பனைக்கு வந்த
கதையின் காரணம் சொல்லவா இப்ப

காடுகள் அழித்ததன் விளைவு தப்பிக்க வழியறியா கொடிய மிருகம்
ஆளும் மனிதன் கைப்பிடி விடுபட வழியறியா குழப்பம்
இணைந்தனர் மிக அருகில் மனிதனும் விலங்கும்
இன்னுமோர் இணைவாக நாட்டு மிருகமும் காட்டு மிருகமும்

இத்துடன் முடியுமா உருவான காரணங்கள் மனிதரால்
பொருளாதார முன்னேற்ற நடபடிகள் என்ற பெயரால்
காடுகள் வழியாய் சாலைகள் அமைத்தான் சுரங்கங்கள் வெட்டினான்
இன்னும் தன்னை மீண்டும் விலங்கின் அருகில் கொண்டான்

கொடூரச் செயல்கள் நின்றபாடில்லை உஹானில்
மீண்டும் அறிந்தனர் விஞ்ஞானிகள் ஆராட்சியில்
கொடிய விலங்குகள் உலக வணிகத்தில் விலை பொருட்கள்
இலாபம் கண்ட சீனா தொடர்ந்தது இன்னும் பல தீச்செயல்கள்

வீட்டு விலங்குடன் ஓநாய் குட்டிகளும் எலிகளும் சந்தையில் செல்ல
நரிகள் பூனைகள் எத்துனை விதவித விலங்குகள் மனிதன் வாங்கி உண்ண
வவ்வால் வழி பன்றிகளில் வந்த நிப்பாவும் பின் குதிரைக்கு ஹின்ட்ரா வைரசும்
நுழைந்த கதைகள் விளக்கிய வரலாற்று ஆவணங்கள் உள்ளன நம் கைவசம்

மாசுள்ள சுற்று சூழல் சீரமைக்க வந்தான் மனிதன்
வேறு சாத்திய வழிதேடும் அவன் நல்லதென்றான்
கொடிய காட்டு வவ்வால்கள் அழித்து ஒழிக்க
அவன் திட்டம் ஒன்று தீட்டினான் தன்னை காக்க

பல்லுயிர் பெற்ற காடுகள் தன்னகத்தே உயிர் கொல்லும் கிருமிகள்
மனிதர் வாழ் குடிகட்க்கு வெளியே பரந்து விரிந்த கால்நடைகள்
வீற்றிருக்கும் உண்மை உணரா நாகரீக மாந்தர்
அறிந்தபின் துயருற்று செயலற்ற நம் வேந்தர்

உண்மை அறிந்தும் அறியாத அரசுடன் தனிநபர் இவர்கள்
எவ்வித தொந்தரவற்ற இந்த இயற்கை வனப்புடைய நிலங்கள்
பொருளாதார வளர்ச்சியின் தடையென்ற கருத்து நிறுத்துதல்
சமமானது இத்துனை பேரழிவு இல்லா உலகம் காத்தல்

குறுகிய காலம் நெடிய வளர்ச்சி கோவிட்-பத்தொன்பது
கவனமில்லா அரசு கொடூர விளைவுகள் பல தவிர்க்க என்பது
காடுகள் அழிப்பு நிறுத்த அரசின் நடவடிக்கை எடுத்தல்
இன்னும் நல்லபல முடிவு மனித குலம் அழிவு தடுத்தல்

உணர்ந்தாயோ மனிதா! வெறும் ஒரு கொரோன வைரஸ் தொற்று
தன் கால் பாதம் மனித குலம் அடிபணிய வைத்து
உன் வாழ்க்கைத்தரம் மாறிய உண்மை நிலவர சோகம்
மாறிக்கொண்டிருக்கும் சமூக வாழ்வு தடுமாற்ற அவலம்

அறிவாயோ! கொரோனாவே! உன் உருவளவு நிலை பற்றியும்
ஒரு மில்லிமீட்டர் விட்டத்தில் பத்தாயிரத்தில் ஒருபகுதி குறைவும்
உன் கற்பனைக்கு எட்டா மண்ணுலக விட்டமிருந்தும் உன் கிருமிகள்
வீரியத்தில் விளையாடுதே பல்லாயிர மக்கள் உயிரினுள்

சீன மண்ணில் வேரூன்றி உலகம் சுற்றும் உன் நோக்கமேன்னவோ
மண்ணுலகம் அறியா அழிவை கட்டவிழ்த்தது நீயல்லவோ
அடக்கி ஆளும் தீய எண்ணம் நிறை கொண்டவனே
பாகுபாடின்றி பல்லாயிரம் உயிர் குடித்த கல் நெஞ்சனே

வயதானோர் குழந்தைகள் உனக்கேதிராளிகள் என்று தவறாக உணர்ந்தாயே
ஏன் இக் கொடூரம் இப்பாரில் என உணராமல் திரிகின்றாயே
பசியால் வாடும் குற்றமற்ற மாந்தர்க்கு வஞ்சகனோ நீ
அறிஞர்கள் விஞ்ஞானிகள் திசையறியா திகைக்க வைத்த நீ

தெருக்களில் மயான அமைதியையல்லவா ஏற்படுத்தினாய்
சொந்த பந்த உறவு பற்றி ஏதும் அறியாதவனாய்
பிறப்பு இறப்பு சிறப்பு கூட்டங்கள் தடை போட
ஏன் வந்தாய் உன் படையோட எம்மவரை சூறையாட?

திருமணங்கள் ஆயிரங்களால் கோலாகலமாக்கிய எம் பாரம்பரியம்
பத்து இருபது என்று குறைத்தது உன் தந்திரம்
எம் துன்ப வெள்ளத்தில் அக்களித்து ஆரவாரம் செய்யும் உனக்கு
வேட்டு வைத்து வேரறுக்கும் நாட்கள் தொலைவிலில்லை அருகில் இருக்கு

இன்னும் பல அழிவுகள் கண்டு நிலை குலையும் உலகம்
ஆயிரமாயிரம் சாவுகள் ஒவ்வொரு நாளும் ஏங்கி நிற்கும் மனித குலம்
என்று முடியும் உன் கோரதாண்டவம் என முழங்காலில் கண்ணீர் சொரிய
துணைபுரிவாயோ இறைவா விடுதலை தந்து முடிவு காண.

